**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**

**அசல் வழக்கு எண். 96/2021**
**நாள் 14/03/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – மகேஷ் | த/பெயர் – முனுசாமி |
| வயது – 38 | தொழில் – |
| விலாசம் – பரணம்பேடு கிராமம், பொன்னேரி | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

பிரதிவாதி எனக்கு அண்ணன் உறவு முறை ஆவார். எனது தாயார் பெயர் முனியம்மாள். முறையாக திருமணம் செய்து கொண்ட முதல் கணவர் பெயர் ராமநாதன் ஆவார். முனியம்மாள் மற்றும் ராமநாதனுக்கு பிறந்தவர் தான் பிரதிவாதி என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் வாதியாக இருப்பவர் என் தாயாரின் இரண்டாவது கணவர் ஆவார். முனுசாமி மற்றும் முனியம்மாளுக்கு எந்த வருடம், எந்த இடத்தில் திருமணம் ஆனது என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி முனியம்மாள் அவரது முதல் கணவரையும் அவருக்கு பிறந்த பிரதிவாதிக்கு 5 வயது இருக்கும் போது அனாதையாக விட்டுவிட்டு வந்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு தான் எனது தந்தையை 2வதாக திருமணம் செய்து கொண்டார். அதன் பிறகு பிரதிவாதி குமாரன்நாயக்கன் பேட்டையில் உள்ள அவரது தந்தையுடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு பிரதிவாதிக்கு 17 வயது இருக்கும் போது முனியம்மாள் அழைத்து வந்து தனது இரண்டாவது கணவருடன் சேர்த்து

வளர்த்து வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 2004 ல் திருமணம் நடந்தது என்றால் அது பற்றி தெரியாது. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. பிரதிவாதிக்கு அவரது தாயார் முனியம்மாள், எனது தந்தை ஆகியோர் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்தனர் என்றால் சரியல்ல. முனியம்மாளின் முதல் கணவர் ராமநாதன் 2018 ல் இறந்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. முதல் கணவர் இறந்தபிறகு முனியம்மாள் அவரது வீட்டிற்கு சென்று அவருக்கு செய்யவேண்டிய இறுதி சடங்கை செய்தார் என்றால் சரியல்ல. அவர் அங்கு செல்லவில்லை. நான் கூறுவது தவறு என்றும் இந்து சமய வழக்கப்படி தனது முதல் கணவருக்கு செய்யவேண்டிய காரியங்களை செய்தும் அங்கு 2 மாதம் தங்கியிருந்தார் என்றால் சரியல்ல. முனியம்மாள் எந்த வருடம் இறந்தார் என்று ஞாபகம் இல்லை. முனியம்மாள் இறந்தவுடன் எனது தந்தையை நான் அடித்து துரத்தினேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு 2 வருடமாக பிரதிவாதி தான் முதல் வாதியை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி தெரியாது. ஆனால் மேற்படி பட்டா எனது அம்மா பெயரில் உள்ளது தெரியும். மேற்படி பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் பட்டாவின் நகலை தான் தாக்கல் செய்துள்ளோம். அசல் பட்டாவை அடமானம் வைத்துள்ளோம். எந்த வருடம் அடமானம் வைத்தோம் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது அடமானத்தில் தான் இருந்தது. பட்டாவில் எந்த சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த பட்டா எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பட்டாவில் உள்ள சொத்தை

எந்த விதத்தில் உரிமை கோருகிறேன் என்றால் நாங்கள் மேற்படி சொத்தில் தான் நீன்டகாலமாக அனுபவத்தில் இருந்தோம். எனது தாயார் முனியம்மாள் பெயரில் பட்டா ஏற்ப்பட்டு விட்டது. எனது தாயார் தாவா சொத்தை பொருத்து எனது பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயிலை 2020ல் எழுதினார். எந்த வருடம் எனது தாயார் இறந்தார் என்று ஞாபகம் இல்லை. உயில் ஏழுதிய ஆண்டை தவிர நான் பிறந்த ஆண்டோ, எனக்கு திருமணம் ஆன ஆண்டோ, எனது தாயார் எழுதிய ஆண்டோ எதுவும் ஞாபகம் இல்லை. மேற்படி உயில் கைப்பட எழுதினார்களா என்றால் வெள்ளை தாளில் தட்டச்சு செய்து எழுதினார்கள். அந்த வெள்ளை தாளில் எழுதி உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த உயில் ஆவணத்தை எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. சாட்சி தற்போது உயிலை முத்திரை தாளில் எழுதியதாக மாற்றி கூறுகிறார். உயில் எழுதும் போது எனது தாயார் நல்ல நிலையில் தான் இருந்தார். உயிலை எந்த இடத்தில் வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த உயிலை எழுதி எனது அம்மா எங்கள் வீட்டிலேயே தான் வைத்திருந்தார். நான் அந்த உயிலை எப்போது பார்த்தேன் என்றால் எனது தாயார் இறந்த பிறகு வீட்டை சுத்தம் செய்தபோது பார்த்தேன். எனது மனைவி கூறி தான் நான் தெரிந்துக்கொண்டேன். மேற்படி உயிலில் யாா் யாா் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த உயிலை யார் தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த உயில் எழுதும்போது பரணிமேடு கிராமத்தில் தான் இருந்தார். கும்மிடிப்பூண்டி பகுதியினர் பத்திர தாள் வாங்கவேண்டும் என்றால் கும்மிடிப்பூண்டி, கவரப்பேட்டை, பொன்னேரி பகுதியில் எழுதுவார்கள்.

எவ்வளவு தொகைக்கான முத்திரை தாள் என்று எனக்கு தெரியாது. உயிலின் பத்திரத்தை எந்த ஊரில் வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா ஆ 1 தான் மேற்படி உயில். மேற்படி உயிலின் பத்திரம் வியாசர்பாடி, சென்னையில் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் சென்னை ஸ்டேன்லி மருத்துவமனைக்கு செல்வார். எனது தாயார் உயிலுக்குறிய பத்திரத்தை வாங்க சென்னை சென்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கூறுவது போல் தாவா சொத்துக்கான பட்டா எனது தாயார் முனியம்மாள் பெயரில் இருப்பது உண்மையானால் பிரதிவாதிக்கும் தாவா பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. நான் எனது தாயார் முனியம்மாளுக்கு நான் மட்டுமே வாரீசு என வாரீசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா ஆ 3 ஆவணம் என்ன என்று எனக்கு தெரியவில்லை. வா.த.சா ஆ 2 பட்டாவின் நகலை தாக்கல் செய்துள்ளதால் அது சட்டப்படி சான்றாவணமாக ஏற்க்க இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான வீட்டுவரியை எனது மனைவி தான் செலுத்துவார். நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகளில் எத்தனை ஆவணம் என் பெயரில் உள்ளது என்று சரியாக தெரியவில்லை. வா.த.சா ஆ 1 உயில் எனது தாயார் எழுதியது அல்ல என்றும் தாவா சொத்தை அபகறிக்க நாங்களே மோசடியாக ஏற்ப்படுத்திய உயில் என்றால் சரியல்ல. எனது தாயார் இறந்த பிறகு பிரதிவாதி தான் கொள்ளிவைத்தார். பிரதிவாதி தனியாக அரசு நிலத்தில் வீடுகட்டி வசிக்கிறார் என்றால் சரியல்ல. எனது வீட்டில் தான் அத்துமீறி இருக்கிறார். பிரதிவாதி தற்போது அத்துமீறி இருக்கும் வீட்டின் சரிவே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் குடியிருக்கும் இடம்

எனது தாயார் பெயரில் பட்டா உள்ள இடம். எனது தாயார் பெயரில் 2 1/4 செண்டிற்கு பட்டா ஏற்பட்டுள்ளது. நான் வழக்கு சொத்திலும் பிரதிவாதி புறம்போக்கு நிலத்திலும் உள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி இருக்கும் இடத்தில் இருந்து தான் எனது வீட்டிற்கு மின்சாரம் செல்கிறது. பிரதிவாதி தனியாகவும் நான் தனியாகவும் குடியிருந்து வருகிறோம் என்றோம் பிரதிவாதி என்னை தொந்தரவு செய்யவில்லை என்றும் அவ்வாறு தொந்தரவு செய்யவேண்டும் என்றால் பிரதிவாதி மின்சாரத்தை துண்டித்திருப்பார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அபகறிக்கவும் பிரதிவாதிக்கு பாகத்தை கொடுக்காமல் இருக்கவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு உரிமை மூலம் இல்லாத நிலையில் பிரதிவாதியும் வழக்கு சொத்தில் உரிமை மூலம் கேட்டுள்ள நிலையில் வெறும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியுள்ளது வழங்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் என்னிடம் அசல் பட்டா இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் போலியாக உயில் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**